1973 டிசம்பர் 4]

General Body Meeting of the North Arcot Co-operative Sugar Mills

* 196 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether itis a fact that the General Body Meeting of the North Arcot Co-operative Sugar Mills for 1971–72 has not yet been convened ; and

(*b*) if so, the reason therefor ?

வட ஆற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மகாசபைக் கூட்டம்

திரு. எல். பலராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 1971–72 ஆம் ஆண்டின் மகாசபைக் கூட்டம் இன்னமும் கூட்டப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், காரணம் யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) சர்க்கரை ஆலையின் மகாசபைக் கூட்டம் 27—5—1973-ல் கூட்டப்பட்டது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, காலம் கடந்து கூட்டியதன் நோக்கம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, காரணம் என்ன என்று கேட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். இதில் நோக்கம் எதுவுமில்லை.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த நிர்வாகம் அரசாங்கத்தால் நியமிக்கப்படுவதால், மகாசபைக் கூட்டங்கள் காலம் கடந்து நடைபெறுகின்றன. தேர்வு முறையைக் கையாளாமல் அரசாங்கம் நியமிப்பதுதான் அதற்குக் காரணம் என்று அங்கத்தினர்கள் பேசுகிறார்கள் என்பதை அரசு அறியுமா ? அது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்களே அப்படிக் கருதுவார்கள் என்று நானும் நம்புகிறேன். கூட்டுறவுத் துறையில் தேர்வு முறைதான் வரவேண்டுமென்று நானும் விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை என்றாலே எப்படி என்று எல்லோருக்கும் தெரியும். சர்க்கரை ஆலை போன்ற முக்கியமான ஆலை

களில் தேர்ந்தெடுக்கும் முறையைப் புகுத்த வேண்டுமென்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. முழுமையாக ஒரே நேரத்தில் செய்ய விரும்பவில்லை. படிப்படியாகச் செய்ய முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவேதான் அரசாங்கத்தின் சார்பில் அதிகாரி ஒருவரை மேனேஜிங் டைரக்டராகப் போட்டு வரப்படுகிறது. இந்த வேலையெல்லாம் முடிந்த பிறகு அங்கத்தினரின் யோசனை ஆராயப்படும்.

Treatment of Rabies in Coonoor Area by the Veterinary Hospital

*** 198 Q.—Thiru L. BALARAMAN (on behalf of Thiru V. ISVAR MURTI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the number of cases of rabies, treated in Coonoor area in this State by the Veterinary Hospital during 1971 monthwise ?]**

கூனூர் பகுதியில், கால்நடை மருத்துவ மனையில் நாய்க்கடிக்குச் சிகிச்சை

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில், கூனூர் பகுதியில், கால்நடை மருத்துவ மனையால் 1971 ஆம் ஆண்டில், நாய்க்கடிக்கு மருத்துவம் பார்க்கப்பட்ட நேர்வுகள் மாதவாரியாக எத்தனை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மன்றத்தின் முன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Organic Manure

*** 199 Q.—Thiru L. BALARAMAN (on behalf of Thiru S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—**

(*a*) whether any campaign has been launched in this State for increased use of organic manure ; and

(*b*) if so, the details thereof ?

@ 189ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.